ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

यथा गर्ते नीरं पतति करणालिर्मम तथा
हरे वेगात् धावत्यहह विषयेषु प्रतिदिनम् ।
बलात्कारेणाहं क्षणमखिलसंरक्षणचणौ
करोमि त्वत्पादौ हृदि सततवासं कुरु मम ॥

𑌯𑌥𑌾 𑌗𑌰𑍍𑌤𑍇 𑌨𑍀𑌰𑌂 𑌪𑌤𑌤𑌿 𑌕𑌰𑌣𑌾𑌳𑌿𑌰𑍍𑌮𑌮 𑌤𑌥𑌾
𑌹𑌰𑍇 𑌵𑍇𑌗𑌾𑌤𑍍𑌧𑌾𑌵𑌤𑍍𑌯𑌹𑌹 𑌵𑌿𑌷𑌯𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑌿𑌨𑌮𑍍 ।
𑌬𑌲𑌾𑌤𑍍𑌕𑌾𑌰𑍇𑌣𑌾𑌹𑌂 𑌕𑍍𑌷𑌣𑌮𑌖𑌿𑌲𑌸𑌂𑌰𑌕𑍍𑌷𑌣𑌚𑌣𑍌
𑌕𑌰𑍋𑌮𑌿 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌾𑌦𑍌 𑌹𑍃𑌦𑌿 𑌸𑌤𑌤𑌵𑌾𑌸𑌂 𑌕𑍁𑌰𑍁 𑌮𑌮 ॥

ஹே ஹரே! ஹே விஷ்ணோ! என்னுடைய இந்திரிய ஸமூகமானது பள்ளத்தில் ஜலமானது எவ்விதம் அதிகவேகமாகச் செல்லுமோ அவ்விதம் அதிகவேகத்துடன் ஒவ்வொரு நாளும் உபயோகமில்லாத பல விஷயங்களில் ஓடுகின்றது. அவ்விதம் செல்லும் அந்த இந்திரியங்களை நான் மிகவும் சிரமப்பட்டு பலாத்காரமாக ஸகலப்பிராணிகளையும் பாதுகாப்பதில் மிகவும் சக்திவாய்ந்த உமது சரணங்களை என் ஹிருதயத்தில் ஒரு க்ஷணம் தியானம் செய்கிறேன். அதிலிருந்தும் விடாமல் எப்பொழுதும் என்னிடத்திலேயே நீர் வஸிக்க வேண்டும்.

எனக்குத் தற்காலம் ஏற்பட்டிருக்கும் மானிடஜன்மாவை ஸபலமாகச் செய்யவேண்டி அதற்கு உம்முடைய சரணாரவிந்தங்களுடைய தியானமே முக்கியமென்று நினைத்து அதைச் செய்ய வேண்டி நான் எவ்வளவு பிரயத்தினம் செய்தாலும் ஸாத்தியப்படாமல் இந்திரியங்கள் என்னையும் இழுத்துக்கொண்டு வெளி விஷயங்களில் போய்விடுகின்றன. அவைகளை மிகவும் கஷ்டப்பட்டு ஸ்வாதீனம் செய்துகொண்டு ஒரு க்ஷணகாலம்தான் உம்மை தியானம் செய்யமுடிகின்றது. இதைக்கொண்டே நீர் திருப்தியடைந்து எப்பொழுதும் என்னிடமே வஸிக்கவேண்டுமென்று வேண்டுகிறேன் என்று ஒரு பக்தர் அறிவிக்கிறார். சுபம்.

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
பிரபவ-ஸூ தை-மீ ௨௭௨

# ஸம்ஸ்காரம்.

## 5-வது நாமகரணம்.

(15-வது பக்கத்தொடர்ச்சி)

அனேக பசுக்களுள்ளவோர் ஸ்ரீமான், எல்லாமாடுகளையும் கட்டுவதற்குப் பொதுவான ஒருதாமணிக் கயிரையும், ஒவ்வொன்றையும் தனித்தனியாகக் கட்டுவதற்கு அந்தத் தாமணிக்கயிரில் இடைக்கிடைக்குக் கொஞ்சம் விட்டு விட்டுப் பூட்டப்பட்டிருக்கும்படியான கயிறு (தும்பு) களையும் ஏற்படுத்தி அவைகளிற் கட்டிவைத்து உசிதம்போல் வேலைத்தருணத்தில் அவிழ்த்துவிட்டு கொஞ்சம் ஸ்வாதந்தர்யத்தையும் கொடுத்து வேலை செய்வித்து, அவைகளுக்கு வேண்டியபடி தீனிவைத்துத் தண்ணீரும் காட்டி இவ்வாறாக அவைகளையும் காப்பாற்றி தனது காரியத்தையும் ஸாதித்துக்கொள்வதுபோல தேவர் முதலாயினோர் மனுஷ்ய ஜீவர்களைக் கட்டுவதற்காக நாமத்தைக் கயிறுபோல் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதில் எல்லாமாடுகளிலும் பொதுவாகத் தொடர்ந்து வரும் தாமணிக்கயிறுபோல் எல்லா மனிதர்களிடத்தும் முதன்மையாக உபயோகப்படும்படி இயற்கையாய் அமைந்துள்ள "அஹ்" ஆஹம் நான் என்னும் பொதுவான சப்தமே பொதுவான நாமம் அதனால் ஒருவன் ஒருவீட்டிற்குப் போகும்ஸமயத்தில் கதவு மூடப்பட்டிருக்குமாயின் வீட்டுக்காரரைப்பார்க்க கதவைத் தட்டும்பொழுது வீட்டுக்குள்ளிருப்பவர் 'யார்' என்று வினவ முதல் முதலில் 'நான்' என்று பதிலளிக்கின்றான். 'நான் என்றால் யார்' என்று மீண்டும் வினவ அப்பொழுது தனக்குத்தாய்தந்தையர்கள் நாமகரணகாலத்திலிட்ட பெயரைக் குறிக்கின்றான். அந்த விசேஷப் பெயரே தும்பு போலவாம். இந்தப் பெயரில் கட்டுப்படுகிறார்களென்பது எப்படித் தெரிகின்றதெனில் கூறுவாம். கயிற்றால் கட்டப்பட்ட பசு, அந்தக் கயிரைப்பிடித்து இழுக்கும்பொ

ழுது இழுப்பவனுக்கு நேராகத் திரும்புவதுபோல நாமாவில் (பெயரில்) கட்டுப்பட்ட இந்த ஜீவனும் தன் பெயரைச் சொல்லி அழைப்பவனுக்கு நேராகத் திடீரெனத் திரும்புகின்றானல்லவா. இதனால் இந்த சப்தத்தில் இவன் கட்டுப்பட்டிருக்கிறானெனத் தெரிகிறது. இதுவே ஒரு நல்ல குணமாம். இதனால் நாமகரண ஸம்ஸ்காரத்திற்குக் குணத்தைப் புகட்டுந்தன்மை இருக்கின்றதென்று ஏற்படுகின்றது.

நாமகரண ஸம்ஸ்காரத்தால் விலகும் தோஷமும், உற்பவிக்கும் குணமும் கூறப்பட்டது. அன்றியும் நாமகரணத்திற்குப் பிந்திய ஸகல ஸம்ஸ்காரங்களிலும் இந்தப்பெயரைச் சொல்லிக் கொண்டே அவை செய்யப்படவேண்டும். அந்தக்கர்மங்களுக்குத் தக்கபடி பயனையளிக்கும் பரமேசுவரன், அவைகளைக் கணக்கிட சில அதிகாரிகளைக் கற்பித்திருக்கின்றார். அவர்கள் அவைகளைக் கணக்கிடும்பொழுது அவனவனுக்காக ஏற்படுத்திய பெயரேட்டிலேயே அவனவனது கர்மங்களைப் பதியவேண்டியதற்காகவும் பயன் கொடுக்கப்பட்டு கழிக்கப்பட்டதுபோக சேஷ கர்மாக்களை அவனவன் பெயரால் பாக்கி கட்டவேண்டியதற்காகவும் பெயர் அந்த அதிகாரிகளுக்கு அவசியம் தெரியவேண்டியதாகையால் பெயரிடுவது மனிதர்களுக்கு அவசியமாம். மானிடப் பிறவியில் செய்த கர்மங்களுக்குத்தான் பயன் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவற்றுள் புண்யப்பயனுக்காக சுவர்க்காதிலோகங்களும், பாபப் பயனுக்காக நரகாதிகளும், இரண்டு கர்மங்களும் சமமான நிலைமையில் மனுஷ்யலோகமும் அளிக்கப்பட்டு ஆங்காங்குள்ள போகங்கள் அவைகளுக்குத் தக்கபடி அனுபவிக்கும்படி செய்யப்படுகின்றன. அப்பொழுது சுவர்க்காதி லோகத்திலுள்ளவர்களுக்கும் மனுஷ்யர்களை அபேக்ஷிக்க வேண்டியதாகின்றது. அதற்காக மனுஷ்யர்கள் யாகம், ஹோமம், சிராத்தம் தானம் முதலியவைகளைச் செய்து ஹவிர்பாகத்தை தேவாதிகள் அடையும்படி செய்யவேண்டியதாகின்றது. அப்படிக்கொடுக்கும் ஹவிர்பாகங்கள் பெயர் சொல்லிக் கொடுக்கப்பட்டாற்றான் அவர்களுக்குப் போய்ச் சேரும். அதற்காகவும் பெயர் அவசியமாம். மற்றுமிதைப்பற்றிய விசேஷம் அஷ்டகை மாஸிசிராத்தம் என்ற ஸம்ஸ்காரங்கள் நிரூபிக்கப்படும்பொழுது விரிவாகக் கூறப்படும்.

அப்படி தேவாதிகளை கர்மாதிகாரம் பெற்றவர்கள் ஆராதிப்பார்களானால் அவர்கள் மழை முதலியவைகளால் அந்த மனுஷ்யர்களை அனுக்கிரஹிக்கிறார்கள். அவர்களுக்காக அளிக்கப்படுவது மற்ற பிராணிகளுக்கு உபயோகப்படுகின்றது. யானைக்காகக்கொடுக்கப்படும் தீனியில் சிந்திப்போனது எரும்பு முதலியவைகளுக்கு ஜீவனத்திற்காக ஆகிறதுபோலவாமிது. இவ்வளவுக்கும் பெயரே மூலகாரணமாகின்றது ஆகையால் உசிதகாலத்தில் உசிதமான பெயரிட்டு அதன் வாயிலாகவரும் ஸகல சிரேயஸ்ஸையும் யாவருமடையவேண்டும். இவ்வளவால் நாமகரண ஸம்ஸ்காரம்நிரூபிக்கப்பட்டது. இனி இதற்கடுத்த அன்னப்பிராசனத்தை நிரூபிப்பாம்.

சுபம் !

பத்திராதிபர்.

---

# விவாஹ வயது மசோதா கண்டனம்.

கோயமுத்தூர் ஜில்லா பவானி தாலூகா நெரிஞ்சிப்பேட்டையில் ஸ்ரீமத் தர்மசிவாசார்யஸ்வாமிகள் ஸ்ரீமடத்தில் 14—1—28 சனிக்கிழமை மாலை 5-மணிக்குக் கூடலான பிராம்மணமஹாஸபையின் நடவடிக்கைகள்.

ஸ்ரீமத் தர்மசிவாசார்ய ஸ்வாமிகள் மடம் ஹேஜண்டு ஸ்ரீனிவாஸய்யங்கார் அவர்களின் முயற்சியின்பேரிலும் ஜனங்களின் உத்ஸாஹத்தின்பேரிலும் நெரிஞ்சிப்பேட்டை, பூலாம்பட்டி, மாமுண்டி, கோனேரிப்பட்டி, நாகையநல்லூர், முதலிய கிராம மஹாஜனங்கள் ஏராளமாய் ஸபைக்கு விஜயம் செய்திருந்தார்கள். ஷை ஸபைக்கு பிரும்மஸ்ரீ N. K. வெங்கட்டரமணசாஸ்திரிகள் அவர்களை அக்ராஸனராக இருக்கும்படி வெங்கட்டராமய்யரால் பிரேரேபிக்கப்பட்டு மடம் ஹேஜண்டு ஸ்ரீனிவாஸய்யங்கார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஸபையோர்களால் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டதும் அக்ராஸனர் அவர்களால் “சட்டஸபையும் நமது ஆசாரமும்” என்ற விஷயமாய் இனியதோர் உபன்யாஸம் செய்யப்பட்டது. ஷை உபன்யாஸத்தில் நமது பிரதிநிதிகளின் மனப்பான்மையையும் அவர்களால் நமது மதவிஷயங்களில்

செய்யப்படும் தீங்குகளையும், சமீபத்தில் இந்தியா சட்டஸபைக்கு வரவிருக்கும் ஷை மசோதாவானது நமது சாஸ்திரங்களுக்கும் அனுஷ்டானத்திற்கும் முற்றிலும் விரோதமாயிருப்பதும்தவிர சட்டமாகி அமுலுக்கு வருங்காலத்தில் அனேகவிதமான கஷ்டங்களுக்கு இடமுண்டாகுமென்றும், தஞ்சைஜில்லா துவாரில்கூடிய பிராம்மணமஹாஸம்மேளனம், சென்னையில் கூடிய வர்ணாச்ரம தர்ம மஹாநாடு, இவைகளின் தீர்மானத்திற்கு முற்றிலும் விரோத மானதென்றும், ஆனதால் நமது ஸபையோர்கள் ஏகமனதாய் ஷை மசோதாவைக் கண்டனம் செய்யும் விஷயத்தில் ஊக்கம் காட்டுவது அவசியமென்றும். கொஞ்சகாலத்திற்குமுன் ருதுமதீ விவாஹம் சாஸ்திரீயந்தான் என்ற விஷயத்தை ப்ரசாரத்துக்குக் கொண்டுவர மிகுந்த சிரத்தையெடுத்துக்கொண்ட சில மேதாவிகளை வேதாந்தகேஸரீ ப. கணபதிசாஸ்திரிகளின் "வயோ நிர்ணயம்" என்ற பிரும்மாஸ்திரந்தான் திருத்தியமைத்ததென்றும் ஆனதால் வயோ நிர்ணய ப்ரம்மாஸ்திரமுள்ளவரையில் இம்மசோதாவை சாஸ்திர ஸம்மதமானதென்று சொல்லமுடியாதென்றும், யுக்திக்கும் ஆசாரத்திற்கும் முற்றிலும் விரோதமானதென்றும் தகுந்த மேற்கோள்களுடன் எடுத்துக் காட்டப்பட்டதும் அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது

1. நமது பூர்வாசாரப் பிரகாரம் பெண்களுக்கு 10-வயதிற்கு மேல் விவாஹம் செய்வது உசிதமில்லையென்பது நம் தர்ம சாஸ்திர மூலம் ஏற்பட்டிருந்தும் ருதுவிற்குப் பின்னும் விவாஹம் செய்யலாமென்பதைக்காட்டக்கூடியதும் கனம் V. S. ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டதுமான 'ருதுமதீவிவாஹம்' என்னும் புஸ்தகத்திற்குக் கண்டனமாக பிரும்மஸ்ரீ வேதாந்தகேசரீ ப. கணபதிசாஸ்திரிகள் அவர்களால் ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்ட 'வயோநிர்ணயம்' என்றகிரந்தத்தையே ஆதரித்துப் பெண்களுக்கு உசிதமான காலத்தில் அதாவது 10-வயதிற்குள் விவாஹம் செய்வதையே இந்த ஸபை ஆதரிக்கிறது.

2. 1-வது தீர்மானத்துக்கு மாறாக விவாஹகாலத்தை 12, 14, 16-வயதாக உயர்த்துவதை இச்சபை பலமாகக் கண்டிக்கிறதுடன் பெண்களின் விவாஹகாலத்தை இந்த ஸபையின் தீர்மானப்படி 10-வயதிற்குள் என்பதையும் ஊர்ஜிதப்படுத்துகிறது.

3. பால்ய விவாஹத்தால் ஏற்படுமென்று தற்காலம் சொல்லப்படுகிற வியாதி முதலானவைகள் அனேக காலமாய் பால்ய விவாஹத்தை அனுஷ்டித்துவந்த முன்னோர்களிடத்தில் காணப்படாததாலும் நமக்கும் பிரத்யக்ஷ அனுபவத்திலில்லையாதலாலும் அவர்கள் சொல்லும் வியாதி முதலானவைகளுக்கு பால்ய விவாஹம் ஒரு காரணமாகமாட்டாதென்பதை இச்சபை நிச்சயப்படுத்துகிறது.

4. இந்த 'விவாஹ சம்மத வயது மசோதா' ருதுவிற்குப் பின் விவாஹம் செய்யும் வழக்கமுள்ள பிராமணரல்லாதவர்களைப் பாதிக்கக் கூடியதாக இல்லை. யோசிக்குமளவில் சிறிய தொகையினர்களான பிராமணர்களையே மாத்திரம் முக்கியமாய் பாதிக்கக் கூடியதாயிருப்பதால் பிராமணர்களடங்கிய இந்த ஸபை இம்மசோதாவைச் சட்டமாக்கக்கூடாதென்று நமது காருண்ய கவர்ன்மெண்டார் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

5. பிரஸ்தாப சம்மத வயது மசோத 16, 14, 12-வயதாகக் குறைந்து வந்திருப்பதுபோல் இச்சபையின் தீர்மானத்தை அனுஸரித்து 10-வயதிற்குள்பட்ட காலத்தைக் குறிப்பிடுமானாலுங்கூட மதவிஷயமான இதில் காருண்ய கவர்ன்மெண்டார் அவர்களை பிரவேசிக்காமலிருக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறது.

6. இம்மஹாஸபையின் தீர்மான நகலை நமது காருண்ய கவர்ன்மெண்டார் அவர்களுக்கும் கனம் சட்டமெம்பர் அவர்களுக்கும் அனுப்பிக்கொள்ள வேணுமாய் இச்சபை தமது அக்ராசனர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

இச்சபை மாலை 7-மணிவரையில் மேல்கண்ட தீர்மானங்களை முடிவுசெய்து அக்ராசனருடைய முடிவுரையுடனும் வந்தனோபசாரத்துடனும் இனிது நிறைவேறியது.

N. K. வேங்கட்டராமசாஸ்திரி,
நெரிஞ்சிப்பேட்டை.

தருமமே ஜெயம்.

# ஓர் கண்டனக் கூட்டம்.

கோவல் வீரட்டானம், ஆர்யதர்மாபிவர்தனீ, ப்ராம்மண தர்மாபிவர்தனீ சபைகளின் சார்பாக இன்று 29—1—28 மாலை 4-மணிக்கு இந்தியா சட்டசபையிலும் சென்னை சட்டசபையிலும் கொண்டுவரப்போகிற விவாஹவயதுநிர்ணய மசோதா சம்பந்தமாய் ஓர் கண்டன மஹாநாடு கூடிற்று.

அவ்வமயம் பிரும்மஸ்ரீ பண்டித **கோபிநாதாசாரியார் அவர்கள்** அக்கிராஸனம் வகித்தார்கள்.

ஷை சபைகளின் அங்கத்தினர் வ. சு. நடேசய்யர் அவர்கள் அடியிற்கண்ட தீர்மானத்தைப் பிரேரேபிக்க அக்கிராஸனாதிபதி அவர்கள் வேதமந்திரங்களாகிய மந்திரப்ரசனங்களை விஸ்தாரமாக எடுத்துக்காட்டி ஷை மசோதா சாஸ்திரவிரோதமானதென்றும் நம் சனாதன வைதிக தர்மானுஷ்டானத்தை அடியோடு கெடுத்துவிடுமென்றும் ஆகவே ஸதாசார ஸம்பன்னர்களாகிய எல்லோரும் இம்மசோதாவை எதிர்த்து சட்டமாகக் கூடாதென்றும் நம்முடைய காருண்ய அரசாங்கத்தாருக்குத் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். பின்பு நம் நகர் உயர்தர கலாசாலை சம்ஸ்கிருத போதகாசாரியர் நியாய சிரோமணி பிர்மஸ்ரீ ஆராவமுதய்யங்காரவர்கள் தக்க வேத சாஸ்திர ஆதாரங்களுடன் ஷை பிரேரேபணையை ஆமோதித்தார்கள். பின் ஷை சபைகளின் உபத்தலைவர் கொளத்தூர் பிரம்மஸ்ரீ சேஷ ஘னபாடிகளவர்கள் சுருதி யுக்தி அனுபவ வாயிலாக அம்மசோதாவினால் விளையக்கூடிய தீங்குகளை எடுத்து நன்கு விளக்கினார்கள். பிறகு ஷை ஸபைகளின் காரியதரிசியும் தனாதிகாரியுமான பிரம்மஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரிகள் பிர்மஸ்ரீ ஸ்ரீநிவாஸசாஸ்திரிகள் மற்றும் சபைக்கு விஜயம் செய்திருந்த பெரியோர்கள் எல்லாரும் அடியிற்கண்ட தீர்மானத்தை ஏகமனதாய் அங்கீகரித்தார்கள்.

## தீர்மானம்.

சென்னை சட்டசபையிலும் டில்லி சட்டசபையிலும் கொண்டுவரப்போகிற விவாஹநிர்ணய மசோதாவானது பொதுவாக நம்நாட்டில் ஸனாதன தர்மானுஷ்டாதார்களாகிய வர்ணாசிரமிகளின் அடிப்படியான தர்மத்தைக் கெடுத்துவிடவும் விசேஷமாக பிராம்

மண ஸமூகத்தின் மிகவும் முக்கியமான ஸம்ஸ்காரமாகிய கிருஹஸ்தாசிரமத்தை ஒழித்து விடவும் நம்முன்னோர்களின் ஆழ்ந்த கருத்துக்களைக் கண்டறியும் அறிவாற்றலற்ற சில ஆசாரசீர்த் திருத்தக்காரார்கள் தாங்கள் செய்வதின்னதென்று நன்குணராது நம் ஜனஸமூஹத்திற்கிழைக்கும் ஓர் பெருந் தீங்காகுமென்றும் அதை ராஜாங்கத்தார் சட்டமாக்குவது பொதுஜன நன்மைக்கும் அபிப்பிராயத்துக்கும் முற்றிலும் விரோதமாகுமென்றும் ஷை மசோதாவிற்கு அரசியில் ஸம்மந்தம் மதஸம்மந்த மூலமாகவே யுண்டாவதால் ஷை மசோதாவைச் சட்டசபையில் சட்டமாக்க விரும்பும் அங்கத்தினர்கள் இம்மதஸம்மந்தமுள்ள காரியத்தைக் கொண்டுவர உரிமையுள்ளவர்கள் அல்லவென்றும் ஏற்கனவே மாட்சிமை தங்கிய விக்டோரியாமஹாராணியவர்கள் இந்தியர்களுக்களித்துள்ள மதஸ்வதந்திரத்திற்கு இது விரோதமாகுமென்றும் ஆகவே இவ்விபரீத மசோதாவைச் சட்டசபையில் கொண்டுவர நியாயமில்லை என்றும் நம் காருண்ய அரசாங்கத்தார் ஷை மசோதாவை ஏற்றுக்கொள்ளாது தள்ளிவிட வேண்டுமென்றும் இம்மஹாஸபை கேட்டுக்கொள்ளுகிறது.

K. R. சுப்பிரமணியசாஸ்திரி
காரியதரிசி

---

# வேறு ஒரு விவாஹ வயது மசோதா.

சென்னை ராஜதானியிலுள்ள இந்துக்களில் தங்கள் பெண்களுக்கு 14-வயதுக்கு முன்னும் ஆண்களுக்கு 16-வயதுக்குமுன்னும் விவாஹம் செய்விப்பவர்களுக்கும் அவ்விவாஹங்களை நிறைவேற்றிவைப்பவர்களுக்கும் ஆறுமாதம் வெறுங்காவல் அல்லது ரூ 1000 வரையில் அபராதம் அல்லது இவ்விருதண்டனைகளையும் சேர்த்து விதிக்கவேண்டுமென்று பால்ய விவாஹத்தைத் தடுக்கும் மசோதா ஒன்றை, தான் கொண்டுவரப்போவதாக, டாக்டர் முத்துலக்ஷ்மியால் 1927-ஆம் டிசம்பர் ஆரம்பத்தில் சென்னை சட்ட ஸபையில் ஒரு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. தவிர, பல ஸ்திரீகளின் கூட்டங்களிலிருந்து ஷை விவாஹ வயதைப் பெண்களுக்கு 16-ம், ஆண்களுக்கு 21-மாக உயர்த்தவேண்டுமென்று தமக்குத் தீர்மானம் கிடைத்திருப்பதாகவும்; இனி அதை

சுலபமாக முடித்துக்கொள்ள, இந்த மசோதாவைப்பூர்வபீடிகை யாகக்கொண்டுவந்திருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

சென்னையில் சென்ற டிசம்பர் கடைசியில்நடைபெற்றஆசார சீர்திருத்தக் கூட்டத்தில் வரவேற்பு பத்திரம்படித்த டாக்டர் முத்துலக்ஷ்மியால் இந்து குடும்பங்களில் ஸ்திரீகளும் விதவைகளும குரூரமாய் நடத்தப்பட்டு வருவதாக சில பொருந்தாத விஷயங்கள் சொல்லப்பட்டதுடன் 'இந்துக்களுள் விசேஷ ஒற்றுமை உண்டுபண்ண ஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் ஹாஸ்டல்களிலும் இன்னும் இதர பாடசாலைகளிலும் ஜாதி வித்யாஸம் ஒழிக்கப்பட்டு ஐகமத்தியம் பரவச்செய்யப்பட வேண்டுமென்பதும் கூடியசீக்கிரம் எல்லா ஜாதி மாணவர்களையும் ஒருமித்து ஸமபந்தி போஜனம் செய்யச் செய்விக்க வேண்டுமென்பதும் என்னுடைய பூர்ண நம்பிகை' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதனல் தாம் கேட்கும் விவாஹசீர்திருத்தத்தோடு நிற்காமல், நம்முடைய புராதன இந்துமதத்தின் ஆணிவேரையே ஒழித்துவிடவேண்டுமென்பதும் டாக்டர் முத்து லக்ஷ்மியின் அபிப்பிராயம் என்பது நமக்கு ஸ்பஷ்டமாய் விளங்கிவிட்டது.

ஏற்கனவே டில்லி அகில இந்திய சட்டசபையில் மிஸ்டர் ஹர்பிலாஸ் ஸர்தா என்பவரால் இந்தியாவில் பெண்களுக்கு 12-ம் பையன்களுக்கு 15-ம் விவாஹவயதாக ஏற்படவேண்டுமென்றும் அல்லது குறைந்தது பெண்களுக்கு 11-ம் ஆண்களுக்குப் பகுத்தறிவுகாலமாகிய 18-ம் வயதாக ஏற்படவேண்டுமென்று ஒருவிவாஹ வயது மசோதாவும், டாக்டர் ஹரிஸிங் கவர்என்பவரால்பெண் தன்னை பாணிக்ரஹணம் செய்த கணவனேடு 16-அல்லது குறைந்தது 14-வயது பூர்த்தியாவதற்குள் புணரக்கூடாது என்ற ஸம்போக வயது நிர்ணய மசோதா ஒன்றும் கொண்டுவரப்பட்டு இவ்விரண்டும் தற்காலம் நடவடிக்கையில் இருந்துவருகின்றன. கவர்ன்மெண்டார் மதவிஷயத்தில் பிரவேசிப்பதில்லையென்று செய்த பிரதிக்ஞையை நிறைவேற்றும்படிக்கும் இவ்விரு மசோதாக்களையே ஆதரித்து சட்டமாகச்செய்யப்படாதென்றபலமான ஆக்ஷேபணைகள் ஏற்பட்டுவருகையில் இப்பொழுது தமக்கும் ஒரு பெயர் கிடைக்கவேண்டுமென்று எண்ணி டாக்டர் முத்துலக்ஷ்மி இந்த விவாஹவயது மசோதாவை சென்னை மாகாணசட்டசபையில் கொண்டுவந்திருப்பதைத் தவிர இம்மசோதாவுக்கு அவசியம்இன்தென்று நமக்குப் புலப்படவில்லை.

பிராமணரல்லாத இந்துக்களுள் இருந்துவரும் வழக்கப்படி ப்ரௌடையான 13, 14 வயது பெண் 18 அல்லது 20 வயதுப் பையனுக்கு விவாஹம் செய்விக்கப்படுவாள். ஆகையால் ப்ரௌடையான பிறகுதான் பெண்ணை விவாஹம் செய்விக்க வேண்டுமென்று சட்டம் அவர்கள் விஷயத்தில் ஏற்படவேண்டியதில்லை. பெரும்பாலரான ப்ராமமணப் பையன்களுக்கு 17, 18 வயதிற்குக்குறைந்து விவாஹம் நடைபெறுவதில்லை. சாஸ்திரத்திற்சொல்லியபடி 10முதல் 12வயதுக்குட்பட்ட(ருதுவாகாத)பெண்17அல்லது 18 வயதுள்ள பையனுக்கு விவாஹம் செய்விக்கப்படுகிறாள். இப்பெண்ணுக்குத் தன்னை பாணிக்கிரஹணம் செய்த புருஷர்களுடைய சரீரஸம்ஸர்க்கம் அவளுடைய 14 வயதிலும் அவள் இன்னுமநாள் கழித்து ப்ரௌடையானால் 15-வது வயதிலும் ஏற்படுகிறது இவ்விதம் 21,22வயதில்புருஷபர்வத்தையடைந்த கணவன் 14வயதில் ஸ்திரீபர்வத்தையடைந்த பெண்ணைபார்யையாகஅடைகிறான் மிஸ்டர் ஸர்தா சொல்லுகிற பிரகாரம் 11-அல்லது 12 வயதுள்ள பெண்ணை 15-அல்லது 18-வயதுள்ளவனோடாவது, அல்லது டாக்டர் முத்துலக்ஷ்மி சொல்லுகிற பிரகாரம் 14 வயதுள்ள பெண்ணை 18 வயதுள்ள பையனோடாவது சேர்ப்பிப்பதைப் பார்க்கிலும் இப்பொழுது ப்ராம்மணர்களுக்குள் நடந்துவரும் வழக்கப்படி 21-வயதுள்ளவன் 14-வயதுள்ளவளோடு சேர்வது அதிக சிலாக்கியமல்லவா ?

இந்த நிலைமையில் மதவிஷயத்தில் ப்ரவேசிப்பதில்லையென்று ப்ரதிக்ஞை செய்துகொடுத்திருக்கும் ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தாரிடத்தில் மதப்பற்றுள்ள ப்ராம்மணர்களுக்கு அநாவசியமான பயத்தையும் வெறுப்பையும் உண்டாக்க வேண்டுமென்கிறதைத் தவிர இம் மசோதாக்களுக்கு அவசியம் ஏது ?

டாக்டர் கவர் கொண்டுவந்திருக்கும் ஸம்போகவயதுநிர்ணய மசோதாவின் அவசியம்தான் என்ன ? ப்ரௌடையான பெண் 14-வயது பூர்த்தியாகி 15-வது வயதில் முதல் தினம் புருஷனுடன் சேர்ந்தால் என்ன அல்லது 14-வயது பூர்த்தியாவதற்கு 2, 3ஸ்ரீ முன்னதாகச் சேர்ந்தால்தான் என்ன ?

மிஸஸ் கஸின்ஸ், மிஸ்டர் ஹர்பிலாஸ் ஸர்தாவுக்கு எழுதிய கடிதப்படி சில ஸ்திரீகள் தங்கள் பெண்களுக்கு S. S. L. C. பரீக்ஷைதேற 16-வயது பூர்த்தியாகும் வரையில் கல்யாணம் செய்

விக்கக் கூடாதென்று சொன்னால் அவர்கள் யதேச்சையாக நடந்து கொள்வதைத்தடுப்பவர் ஒருவருமில்லை. எல்லாப் பெண்களுக்கும் 16-வயது பூர்த்தியாவதற்குள் கல்யாணம் செய்விக்கக் கூடாதென்ற சட்டம் எதற்காக ?

இனி பெண்களின் விவாகவயதை 16 என்று டாக்டர்முத்துலக்ஷ்மி உயர்த்தப்போகும் சட்டத்துக்கு ப்ராம்மணரல்லாதஇந்துக்களில் கூட 100-க்கு 99-பேர் தங்கள் பெண்களை 16-வயது முடிய கல்யாணமில்லாமல் வைத்துக்கொள்ளவாவது அப்பெண்கள் ஜாதி அந்தஸ்து முதலிய பொருத்தமில்லாத தனக்கிஷ்டமான ஒருவனைத் தானாகத் தேர்ந்தெடுக்கவாவது அல்லது கல்யாணமே இல்லாமலிருந்துவிடவாவது ஒருக்காலும் இடம் கொடார்கள். தன் ஆயுள் காலத்தில் தன் பெண்ணுக்கு ஒரு தகுந்த வரனைத் தேடிவிவாகம் செய்துகொடுத்துஅவளுக்குக் கணவன்என்ற ஒரு ரக்ஷகனை ஏற்படுத்துவது தன் கடமை என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள்.

தங்கள் நிலைதவறி சீர்த்திருத்தக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கும் சிலரைத்தவிர ஜாதி வித்தியாஸத்தையும் மதத்தையும் அடியோடு அழிக்க எண்ணங்கொண்ட டாக்டர் முத்துலக்ஷ்மிக்கு வேறு ஒருவரும் துணைகிடையாது. சீர்திருத்தக்காரர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் வெறும் வார்த்தையோடு நில்லாமல் உண்மையில் நல்ல எண்ணமுடையவர்களானால் தங்கள் ஸாமர்த்தியத்தைக்கெட்டவழியில் செலுத்தி அநாவசியமாய்ஜனங்களின் மனதைப் புண்படுத்துவதைவிட்டு எந்த ஸமூகங்களில் பால்ய விவாகம் இருப்பதாகத் தெரியவருகிறதோ அவர்களிடம் சென்று பால்ய விவாஹம் அசாஸ்திரீயம் என்பதையும் வைதிகப் பற்றுள்ள ப்ராம்மணர்களுங்கூட 10-வயதுக்குட்பட்ட பெண்களின் விவாஹத்தை விசேஷமாக ஆதரிப்பதில்லை என்பதையும் பால்ய விவாஹத்தால் உண்டாகும் கெடுதல்களையும் அவர்களுக்குத் தெரிவித்து அவர்களைத் திருத்தி நல்வழிக்குக் கொண்டு வந்தால் அதுதான் உண்மையான சீர்திருத்தம். சட்டம் எதற்கு ?

ப்ராம்மணர்களுக்கு சாஸ்திரத்தில் விதித்திருப்பது கந்யா தானம், ரஜஸ்வலா தானம் அல்ல. வைதிகமதப்பற்றுள்ள ப்ராம்மணர்கள் 12-வயது பூர்த்தியாவதற்குள் அதாவது ருதுவாவதற்குள் பெண்களைக்கண்டிப்பாய் விவாஹம் செய்து கொடுத்தே தீர வேண்டும்.

ஆகையால் விவேகிகள் ஆங்காங்கு மீட்டிங்குகள் கூட்டி கண்டனத்தீர்மானங்கள் செய்து தற்காலம் சென்னைசட்டஸபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் விவாஹவயது மசோதாவை அடியோடு தள்ளிவிடும்படிக்கு கனம் மதராஸ் கவர்னர் அவர்களுக்கும் டில்லி சட்டஸபையிலிருந்துவரும் விவாஹ வயது மசோதா ஸம்போக வயது நிர்ணய மசோதா இவ்விரண்டையும் அடியோடு தள்ளிவிடும்படிக்கும் விக்டோரியா மஹாராணியார் அவர்கள் செய்திருக்கும் பிரதிக்ஞைக்கு விரோதமாக மதம் அல்லது மத ஸம்பந்தமான சடங்குகளையும் வழக்கங்களையும் பாதிக்கக்கூடிய மசோதாக்களை இனியும் சட்ட சபைகளில் அங்கிகரிக்காமலிருக்கும்படிக்கும் கனம் கவர்னர் ஜெனரல் அவர்களுக்கு மஹஜர் மூலமாய் மனு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

T. S. நடேசசாஸ்திரியார், "வால்மீகி"

மாயவரம் தஞ்சாவூர் ஜில்லா.

---

☞ இதில் கண்ட அச்சிட்ட மஹஜர் பாரங்கள் அவைகளுடன் இன்னும் கடிதாசுகளைச் சேர்த்துத் தைத்து கையெழுத்துக்கள் வாங்கியனுப்ப தேவையுள்ளவர்கள் மேற்கண்ட விலாஸதாரருக்குத்தெரிவித்துக்கொண்டால்இலவசமாக அனுப்பப்படும்.

# சென்னை வர்ணாச்ரம ஸபை.

இங்கு இதை நடத்தப் பத்திரிகையில் எழுதியும் தென்னாற்காடு முதலியவிடங்களுக்கு நேரில் சென்று ப்ரசாரம் செய்தும் வந்தேன். பலர் உத்ஸாகமளித்துப் பிரதிநிதியாக வர ஸம்மதித்தனர். முத்யால்பேட் ஹைஸ்கூல் ஹாலில் நடத்தி ஸ்ரீ மடத்தில் பண்டிதர்களுக்கு இடமளிப்பதென எனது யோசனை. காங்கிரஸிலுள்ளோரையும் வர்ணாச்ரமிகளாக்கவேண்டும் என்றும் வர்ணாச்ரமத்தை வெறுப்பதை நிறுத்தும்படித் தூண்டி ஆசார சீர்திருத்தக்காரர் முதலிய ஏனைய ஸபைகளைப்போல் நம் ஸ்பைக்கும் இடம் பெற உரிமையுண்டு என்பதை விளக்கவும் காங்கரஸ் பந்தக்கால் நடுவதற்கு முன்னமேயே உபசரணைத்தலைவருக்கு இச்சபைக்கு இடமளிக்கும்படி எழுதினேன்.

(தொடரும்)

வெ. ஸோமதேவசர்மா.